இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23-07-2025

# நிலை தடுமாறும் பழனிசாமி!

**தி**ராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஆட்சியில் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியே அடுத்தும் தொடரப் போகிறது. இதில் எந்த மாற்றமும் இல்லை. இது பழனிசாமிக்கு நன்கு தெரியும். ஆனால் அதனை மறைக்க தினந்தோறும் ஏதாவது சவால்களை, சவடால்களாக விட்டுக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. தன்னை பலவான் போல அவர் காட்டிக் கொள்ள இப்படி பேசுகிறார். ஆனால் அவரது பலவீனத்தையே இந்தப் பேச்சுகள் காட்டுகிறது.

**பழனிசாமியை மிரட்டிப் பணிய வைத்தது பா.ஜ.க. என்பது அனைவருக்கும் தெரியும். அதனால், பா.ஜ.க. சொல்வதற்கு எல்லாம் தலையாட்டி இருக்கிறார் பழனிசாமி என்பதும் அனைவர்க்கும் தெரியும்.** ‘இதனை நாங்கள் மறைக்க விரும்பவில்லை’ என்பதைத்தான் உள்துறை அமைச்சர் அமித்ஷா அளித்த நான்கு பேட்டிகளும் நாட்டுக்குச் சொன்னது. **‘அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும்’** என்று அமித்ஷா சொன்னார். ‘முதலமைச்சர் பதவிக்கு அ.தி.மு.க.வில் இருந்து ஒருவர் வருவார்’ என்று அமித்ஷா சொன்னாரே தவிர, பழனிசாமி என்று அவரது பெயரைச் சொல்லவில்லை. ஏனென்றால் பா.ஜ.க. தலைமை தனக்கு அடக்கமான ஒருவரை பா.ஜ.க.வில் இருந்து உருவாக்கிவிட்டது. அதுதான் முன்னாள் அமைச்சர் வேலுமணி ஆவார்.

கோவையில் ஜக்கி வாசுதேவ் விழாவில் அமித்ஷாவுக்கு இணையாக வேலுமணி அமர வைக்கப்பட்டதும், கோவைக்கு ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கலந்து கொண்ட விழாவில் வேலுமணிக்கு முக்கியத்துவம் தரப்பட்டதும் சாதாரணமாக நடந்தவை அல்ல. திட்டமிட்டு நடத்தப்பட்டவை ஆகும். இதுவும் பழனிசாமிக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. அதனால்தான் தனது ‘சுந்தரா டிராவல்ஸ்’ பயணத்தை வேலுமணி ஊரில் இருந்து தொடங்கினார் பழனிசாமி.

உள்துறை அமைச்சர் அமித்ஷா, திட்டமிட்டு தமிழ்நாட்டு ஊடகங்களுக்கு தொடர்ச்சியாக பேட்டிகள் அளித்து, **‘அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி ஆட்சிதான்’** என்பதை வலியுறுத்திச் சொல்லி வந்தார். அது போன்ற பேட்டிகளை தொடர்ச்சியாக வர வைத்தார்கள். இவை அனைத்தும் பழனிசாமியை நிலை குலைய வைத்துள்ளன.

அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை என்று பழனிசாமி விளக்கம் அளித்தார், **“அமித்ஷா அவர்கள், ‘எங்கள் கூட்டணி, ஆட்சி அமைக்கும்... என்றுதான் சொன்னார்”** என்று சொற்களைப் பிரித்து நிருபர்களுக்கு வகுப்பு எடுத்தார் பழனிசாமி. இவர் சொற்களைப் பிரித்து விளக்கம் அளிக்க, அமித்ஷா தமிழிலா பேட்டி அளித்தார்? அவரிடம் ஆங்கிலத்தில் “If you win, will you join the government” என்று கேட்டபோது, “Yes” என்றுதான் அமித்ஷா சொன்னார்.

**“சட்டசபைத் தேர்தலுக்குபின் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமையும். அதில் பா.ஜ.க.வும் ஒரு அங்கமாக இருக்கும்”** என்பது ‘தினமலர்’ நாளிதழுக்கு (27.6.2025) அமித்ஷா அளித்த பேட்டி ஆகும். ‘ஆட்சியில் பா.ஜ.க. பங்கேற்குமா?’ என்ற கேள்விக்கு, ‘ஆம்’ என்றும் பதில் அளித்தார் அமித்ஷா. (இந்தியன் எக்ஸ்பிரஸ் 12.07.2025) -இவை இரண்டுமே, பா.ஜ.க.வுக்கு பழனிசாமி அடிமைச்சாசனம் எழுதித் தந்து விட்டார் என்பதற்கான சாட்சியங்கள்.

**‘மக்களுடன் நல்லது செய்யும் கட்சியுடன்தான் கூட்டணி வைக்கிறோம்’** என்று சொல்லி பா.ஜ.க. கூட்டணியை நியாயப்படுத்தினார் பழனிசாமி. **‘நாங்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால் தி.மு.க.வுக்கு என்ன?’** என்று கேட்டார் பழனிசாமி. **‘மத்தியில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து தமிழ்நாட்டுக்கு நிறைய திட்டங்களைக் கொண்டு வருவோம்’** என்றும் சொன்னார் பழனிசாமி. இது அ.தி.மு.க.வில் இருக்கும் தொண்டர்களாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை. ‘பழனிசாமி இப்படி பேச வேண்டாம்’ என்று முன்னாள் அமைச்சர்கள் சிலரே அவருக்குச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, பா.ஜ.க.வை ஆதரித்து பேசுவதைக் குறைத்தார்.

இந்த நிலையில், திருத்துறைப்பூண்டியில் கடந்த 19 ஆம் தேதியன்று பேசிய பழனிசாமி, **‘அ.தி.மு.க. தனித்து ஆட்சி அமைக்கும், ஆட்சியில் பங்கு தர நாங்கள் ஒன்றும் ஏமாளி அல்ல’ என்று குறிப்பிட்டார். “பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கலாமா என்று கேட்கிறார்கள். நாங்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம். இது எங்கள் கட்சி. அதிமுக ஆட்சியில் பா.ஜ.க.வுக்கு பங்கு இருக்கும் என்று சொல்கிறார்கள். அது உண்மை இல்லை. முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே, ஆட்சியில் பங்கு தர நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்”** என்று சொல்லி இருக்கிறார். இது பச்சோந்தித் தனத்தின் அடுத்த கட்டம் ஆகும்.

கூட்டணி ஆட்சி என்று சொன்னது அமித்ஷா. எனவே, பழனிசாமி பதில் சொல்ல வேண்டியது பா.ஜ.க. பக்கம் திரும்பித் தானே தவிர, தி.மு.க. பக்கமாக அல்ல.

பழனிசாமி திடீரென்று தைரியசாலியாக ஆகிவிட்டாரே என்று பார்த்தால் அடுத்த நாளே இன்னொரு பச்சோந்தி பல்டியை அடித்தார். **“கூட்டணி ஆட்சி அமைக்க நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல என்று அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. அ.தி.மு.க.வை பா.ஜ.க. விழுங்குவதாக தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் திட்டமிட்டு பரப்புரை செய்வதாலேயே அப்படிச் சொன்னேன்”** என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. அடுத்தடுத்த நாட்களில் அவர் என்ன சொல்ல இருக்கிறாரோ என்று அ.தி.மு.க. தொண்டர்கள்தான் பயத்தில் இருக்கிறார்கள்.

**தகுதியால் முதலமைச்சர் ஆனவர் அல்ல பழனிசாமி. சசிகலா தயவால் முதலமைச்சர் ஆனவர் பழனிசாமி. இப்போது அதேபோல ‘யாராவது’ தன்னை முதலமைச்சர் ஆக்கிவிட மாட்டார்களா என்று அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி. அவரது நிலை தடுமாற்றத்துக்கு அதுதான் காரணம். அவர் தகுதியைச் சொல்ல ஒரே ஒரு உருப்படியான காரணத்தை அவரால் சொல்ல முடியவில்லை. அவரது உளறல்கள் இதன் வெளிப்பாடுகள்தான்.**




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு.திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

### நூல் உருவாக உற்சாகப்படுத்திய எனது கணவருக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது!

# உங்களில் ஒருவராக இருக்கவே எப்போதும் ஆசைப்படுகிறேன்!

## ‘அவரும் நானும்’ பாகம்-2 நூல் வெளியீட்டு விழாவில் திருமதி துர்கா ஸ்டாலின் ஏற்புரை !

**சென்னை, ஜூலை 23 -**

**‘அவரும் நானும்’ எனும் இந்நூல் உருவாக மனப்பூர்வமாக, முழுமையாக எனக்கு ஆதரவு அளித்து உற்சாகப்படுத்திய எனது கணவருக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது. உங்களில் ஒருவராக இருக்கவே எப்போதும் ஆசைப்படுகிறேன் என்று ‘அவரும் நானும்’ (பாகம் 2) நூல் வெளியீட்டு விழாவில் ஏற்புரையாற்றிய திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துணைவியார் துர்கா ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள ‘அவரும் நானும்’ (இரண்டாம் பாகம்) நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்தது.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வரவேற்றார்.

‘உயிர்மை’ பதிப்பகம் சார்பில் கவிஞர் மனுஷ்ய புத்திரன் பதிப்பாளர் உரை நிகழ்த்தினார். பத்திரிகையாளர் லோக நாயகி நூல் அறிமுக உரையாற்றினார். பிரபல எழுத்தாளர் சிவசங்கரி நூலினை வெளியிட, டாபே குழுமத்தின் தலைவர், நிர்வாக இயக்குனர் மல்லிகா சீனிவாசன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

துர்கா ஸ்டாலினின் பேரன்கள் இன்பன் உதயநிதி, நலன் சபரீசன், பேத்திகள் தன்மயா, நிலானி ஆகியோர் சிறப்பு பிரதிகளைப் பெற்றனர்.

விழாவில் முன்னாள் நீதிபதியும், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணைய தலைவருமான பவானி சுப்பராயன், கோவை சந்திரா, ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் நந்தினி ரங்கசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். துர்கா ஸ்டாலின் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

### என்னை வாழ்த்தி அனுப்பினார்!

அப்போது துர்கா ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

முதல்வராகவும், கட்சியின் தலைவராகவும் பல்வேறு பணிகள் இருந்தாலும், ஒரு கணவராக எனக்கு நேரம் ஒதுக்கியதோடு மட்டுமல்லாது, தனக்குக் கிடைத்த நேரத்தில் இந்த நூலை முழுவதும் படித்து, எனக்கு சில ஆலோசனைகளையும் வழங்கி, இந்த நூலுக்கு அன்பு உரையும் எழுதி கொடுத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

இந்த புத்தக வெளியீட்டு விழாவுக்கு அவரால் வரமுடியவில்லை என்றாலும், மனம் முழுவதும் இங்குதான் இருக்கும். நேரலையில் முழு நிகழ்வை பார்த்துக் கொண்டிருக்கும் எனது கணவருக்கு முதல் நன்றி.

சொல்லப்போனால், ‘கண்டிப்பாக நீ இந்த நிகழ்ச்சிக்கு சென்று நல்லபடியாக நடத்திவிட்டு வா’ என்று என்னை வாழ்த்தி அனுப்பியதும் அவர் தான்.

### எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது!

பத்திரிகையில் வெளிவந்த 2 பாகங்களுக்கு பிறகு, என்னுடைய கணவர் முதலமைச்சரான பிறகான நிகழ்வுகளை புதிய அத்தியாயங்களாக இதில் சேர்த்துள்ளோம்.

இந்த நூல் உருவான வகையில் நான் மீண்டும் நன்றி சொல்ல வேண்டியது என் கணவருக்குதான். மனப்பூர்வமாக, முழுமையாக எனக்கு ஆதரவு அளித்து, ‘நீ எழுது துர்கா’ என சொல்லி உற்சாகப்படுத்திய எனது கணவருக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது.

### உங்களில் ஒருவராக இருக்கவே ஆசை!

இந்த நூல் என் கணவர் பற்றியும், என்னைப் பற்றியும், எங்கள் 50 ஆண்டு கால வாழ்க்கை பற்றியும் என்னுடைய பார்வையில் சொல்லும் நூல்.

எப்போதும் என்னுடைய கணவர் உங்களில் ஒருவன் நான் என்று சொல்லுவார். நூலும் அதே தலைப்பில் வெளியிட்டார். அதேபோல், நானும் உங்களில் ஒருவராக இருக்கவே எப்போதும் ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்பட பலர் கலந்து கொண்டனர். ‘உயிர்மை’ நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் நன்றியுரையாற்றினார்.

முன்னதாக கலைமாமணி ராஜேஷ் வைத்யாவின் வீணை இசை நிகழ்ச்சி நடந்தது.

### மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கால வரம்பு!

# ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

## தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 23 -

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கால வரம்பு நிர்ணயம் செய்தது தொடர்பான வழக்கில் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டுள்ளது.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காதது தொடர்பாக, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 142ல் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்தது.

கடந்த ஏப்ரல் 8ம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை உச்சநீதிமன்றம் வழங்கியிருந்தது.

சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க 3 மாதம் கால வரம்பும் நிர்ணயித்து உத்தரவிடப்பட்டது.

மசோதாக்கள் மீதான நடவடிக்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு குடியரசுத் தலைவருக்கும் பொருந்தியது.

இந்த தீர்ப்பு குறித்து உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய அரசு பல்வேறு கேள்விகளை முன்வைத்தது. இதுதொடர்பான வழக்கு தலைமை நீதிபதி கவாய், நீதிபதிகள் சூர்யா காந்த், விக்ரம்நாத், நரசிம்மா, அதுல் சந்தூர்கர் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன்பு நேற்று (22.7.2025) விசாரணைக்கு வந்தது.

தமிழ்நாடு அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக ஏற்கனவே வழங்கிய தீர்ப்பில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

ஒன்றிய அரசு தரப்பில் அட்டார்னி ஜெனரல் வெங்கட்ரமணி, சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா மற்றும் கேரளா தரப்பில் கே.கே.வேணுகோபால் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசுக்கும், அனைத்து மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர்.

அனைத்து மாநில தலைமை செயலாளர்களும் இந்த விவகாரத்தில் பதில் மனு தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டது.

அடுத்த விசாரணை, வரும் 29ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயனாளிகளிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, திருப்போரூர் ஒன்றிய குழு துணைத்தலைவர் சத்யா சேகர், திருப்போரூர் பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.